மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கோவில்பட்டி

அ.வ.எண். 55/2015

5ம்பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் வா.சா.2.

---

பெயர். – திரு.ரமேஷ்

த/பெ. – திரு.தங்கராஜ்

கிராமம் – திருமங்கலக்குறிச்சி

தொழில் – விவசாயம்

தாலுகா – கோவில்பட்டி

வயது – 38.

1872–ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2026–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 01–ஆம் நாள் இந்நீதிமன்ற உதவியாளரால் சத்தியப்பிரமாண வாக்குமூலம் செய்யப்பட்டு, நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>முதல் விசாரணை.</u>–

1) நான் இந்த வழக்கில் 5ம்பிரதிவாதி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதை பிரதிவாதிகள் தரப்பில் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1 | 05.11.2008 ம்தேதியன்று பிராது 6ம்தபசில் சொத்தை உள்ளடங்கி மாணிக்கவாசகம் பிள்ளை 1ம்பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பதிவு நன்கொடைப்பத்திரம் அசல் 9 தாள்கள் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 2 | 16.05.2014 ம் தேதியன்று பிராது 6ம்தபசில் சொத்தை 1 முதல் 4 பிரதிவாதிகள் 5ம்பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பதிவுக்கிரையப்பத்திரம் அசல் 14 தாள்கள் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 3 | 03.02.2015 ம் தேதியன்று பிராது 6ம் தபசில் சொத்திற்கு கட்டிட அனுமதி கோரி திருமங்கலக்குறிச்சி கிராம பஞ்சாயத்தில் 5ம்பிரதிவாதி கட்டணம் கட்டியதற்கான ரசீது அசல் எண்ணம் 1 பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 4 | 03.02.2015 ம் தேதியன்று 6ம்தபசில் சொத்தில் கட்டிடம் கட்ட 5ம்பிரதிவாதிக்கு அனுமதி அளித்து திருமங்கலக்குறிச்சி ஊராட்சியில் வழங்கப்பட்ட கட்டிட அனுமதி வரைபடச்சான்று அசல் பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 5 | 5ம்பிரதிவாதிக்கு சமூகம் நீதிமன்ற அ.வ.எண்.55/2015 வழக்கிலிருந்து சார்பு செய்யப்பட்டுள்ள சம்மன் நகல் பி.வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 6 | 5ம்பிரதிவாதிக்கு சமூகம் நீதிமன்ற அ.வ.எண்.55/2015 வழக்கிலிருந்து சார்பு செய்யப்பட்டுள்ள பிராது நகல் பி.வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 7 | 29.11.2017 அன்று 3,4 வாதிகள் மீது கயத்தார் காவல் நிலையத்திற்கு பதிவுத்தபாலில் 5ம்பிரதிவாதி அனுப்பிய புகார் மனு நகல் பி.வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

| | |
|---|---|
| 8 | 21.12.2009 ம் தேதியன்று கயத்தார் சார்பதிவக ஆவண எண்.3208/2009 ல் 1 ம்பிரதிவாதி சுப்பிரமணியன் ராமையா பிள்ளைக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் சார்பதிவக நகல் பி.வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

முதல் விசாரணை தொடர்ச்சி – கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்ய வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.
திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
01.04.2026.